# எனக்குள் ஒருவன்

அவனை பற்றி சொல்லியே ஆகவேண்டும்.அவன் ரொம்ப நல்லவன்.எல்லோருடைய பிரச்சணைக்கும் முன் சென்று நிற்பான்.இதுவே அவன் என்னை விட்டு பிரிய காரணமாயிற்று.எப்பொழுதாவதுதான் வருவான்.அதுவும் என்னை, என் கையாலாகாத தனத்தை திட்டவே வருவான்.இன்று காலை நாளிதழ் பார்த்துக்கொண்டிருக்கும் போது வந்தான்.சண்டையிட்டு பிரிந்துவிட்டான்.இப்பொழுது அவனைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

அவன் என்னோடு பேசிய முதள் நாள் என் பள்ளி தோழியின் இறப்பு நாள் என்பதால் என்னால் மறக்க முடியாது.அப்பொழுது நான் கோவையில் பணிபுரிந்துக் கொண்டிருந்தேன்.அன்றும் வழக்கம் போல் வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.k.k.நகரிலிருந்து காந்தி நகர் அவ்வளவு தொலைவு இல்லாததால் நடந்து செல்வதே வழக்கம்.

நேரம் சரியாக தெரியவில்லை.ஆனால் சூரியன் மறைந்து R.K.ஜீவல்லர்ஸ்,ஆனந்தபவன் ஸ்வீட்ஸ்டால் விளம்பரங்கள் அப்பொழுது தான் மின்னத் தொடங்கின.கால்கள் வலியெடுக்கத் தொடங்கின.அன்று மாதகடைசி என்பதால் மானேஜர் அறைக்கும் அக்கவுன்டண்ட் அறைக்கும் அலையவைத்தே கொன்றிருந்தனர்.சரி எங்காவது அமர்ந்து செல்லலாம் போல் இருந்தது.தெருமுனை டீக்கடை நோக்கி வேகமாக நடந்தேன்.

"அண்ணே ஒரு kings தாங்க"பற்றவைத்தபடியே பிளாட்பாரத்தில் அமர்ந்தேன்.அன்று அவ்வளவு கூட்டம் இல்லாதபடியால் பிளாட்பாரத்தில் உட்காருவதை யாரும் எதிர்க்கவில்லை.அருகில் இருவர் கைலியுடன் பீடி பிடித்துக்கொண்டிருந்தனர்.அவர்களை

பார்க்கும் போது kings க்கே உரிய பெருமை வெளிப்பட்டதை மறுப்பதற்க்கில்லை.சற்று நேரத்தில் அவர்களும் கலைந்தனர்.

"இன்னிக்கு அவ்வளவா நடமாட்டம் இல்லியே?"

"உங்களுக்கு தெரியா"என்பது மட்டுமே காதில் விழுந்தது.அதற்க்குள் "ஐயோ"என்ற அலறலை கேட்டு திரும்பினேன்.

ரோட்டில் ஒரு கருப்பு உருவம் விழுந்து கிடந்த்தது.ஒடி வரும்போது தடுக்கியிருக்க வேண்டும்.சிகரெட்டை எறிந்துவிட்டு புகை மயக்கத்திலிருந்து வெளியே வந்தேன்.அது ஒரு பெண்.தலை முதல் கால் வரை கருப்பு அங்கி மறைத்திருந்தது.இதற்க்குள் அப்பெண்ணை சுற்றி பத்து பேர் கொண்ட கும்பல் சூழ்ந்திருந்தது.அவர்களின் கைகளில் இருந்த ஆயுதம் கொடுத்த அதிகாரத்தை அப்பெண்ணின் மேல் செலுத்த காத்திருந்தார்கள்.

அவர்கள் அணைவரும் ஒரே வண்ணத்தில் உடை அணிந்திருந்தார்கள்,ஆம் இந்திய தேசிய கொடியின் முதல் வண்ணம் தான்.அதே நிறத்தால் ஆன கொடியை வைத்திருந்தார்கள்.நடுவில் நின்றிருந்தவனை எங்கோ பார்த்ததுபோல் இருந்தது.அவன் தான் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

அவள் எழுந்திருக்க முயன்றாள்.அதற்க்குள் அவள் காலை ஒரு திரிசூலம் பதம்பார்த்தது."ஐயயோ" என்ற ஓலம் மட்டும் செவிட்டு சுவர்களில் பட்டு எதிரொளித்தது."இந்த துலுக்கச்சிக தான் வதவத ன்னு பெத்து போட்டு...இன்னிக்கு நமக்கு போட்டியா வளர்ந்து நிக்கானுக" வயிற்றில் கால்களால் எட்டி உதைத்தான், அந்த வளர்ந்தவன்.

என் உடம்பில் வியர்வை ஊற்றெடுத்தது.தைரியத்தை வரவளைத்து கை கால் நடுக்கத்தை போக்கிக்கொண்டேன்.இதற்க்குள் அப்பெண்ணின் முகத்திரை விலக்கப்பட்டிருந்தது.எனக்கு தெரியும் அவள் ஹசினா பானு தான்.நிச்சியாமாக சொல்லுவேன் அவளேதான்.

நானும் ஹசினாபானுவும் ஆறாம் வகுப்பிலிருந்தே ஒன்றாக படித்தவர்கள்.அவள் வாபா ர.ஃபிக் சார் தான் எங்களின் கணித ஆசிரியர்.அவர் தான் எனக்கு டியுசன் மாஸ்டர்.அவர் டியுசன் பீஸ் கேட்டதே இல்லை.நானும் கொடுத்தே இல்லை.ஆனால் வீட்டில் மாதம் தவறாமல் பீஸ் மட்டும் வாங்கிவிடுவேண்.தேர்வு சமயங்களில் ஹசினா வாபாவுக்கு தெரியாமல் வினாத்தாளை எடுத்து தந்துவிடுவாள்.கடந்த முறை ஊருக்கு சென்ற போது தான் ர.ஃபிக் சார் ஹசினாவை கோவையில் கட்டிகொடுத்திருப்பதாக கூறினார். பார்க்கவேண்டும் என நினைத்திருந்தேன்.இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

அவளுடைய கண்கள் ஆம் அதே கண்கள்.எட்டாம் வகுப்பு படிக்கும்போது அவளுடைய டிபன் பாக்ஸை திருடி தின்றபொழுது என்னை பார்த்து முறைத்த அதே கண்கள்.ஆனால் இப்பொழுது அந்த கண்ணில் இயலாமையும் கெஞ்சலுமே மிஞ்சியிருந்தன.

அப்பொழுது தான் அவன் முதல் முறையாக என்னுடன் பேசினான்."போய் தடு"என்றான்.

"இல்ல நளைக்கு அபீஸ்ல முக்கியாமான வேலை நான் இல்லன்னா நடக்காது.இந்த டைம்ல போயி ஏதாவது பிரச்சணை ஆயிருச்சினா?"v

"நீ போகலன்னா அவ செத்திருவா"

"நா போயி மட்டும் என்ன அயிரபோவுது.அவங்க பத்து பேர்.நா ஒருத்தன்"

"சும்மா போய் பேசியாவது பாரு"

"பேசலாம் ஆனா அவங்க கேக்கனுமே.பாத்தா கேக்குற மாறி தெரியல"

"சரி ஏதாச்சும் பண்ணு.போலிசுக்காவது போன் பன்னு"

"நாள பின்ன போலிஸ் கேஸ் ஆச்சினா கம்பெனில வேலயவிட்டே தூக்கிருவாங்க.இல்லன்னா ..."

இதற்குள் அவளின் ஆடைகள் கிழிக்கப்பட்டு அவள் நிர்வாணமாக்கப்பட்டிருந்தாள்.துலுக்கச்சிக்கு ஆடைகள் தேவையில்லை என முடிவெடுத்திருந்தார்கள்.சினிமாவில் கற்பழிப்பு காட்சிகளையும் ரசிக்கும் வக்கிர ஆணின் மனப்பன்மை என்னில் இப்பொழுது இல்லைதான்.

"இப்பொழுதாவது போய் தடு"

நான் பேசவில்லை.

ஹசினா கைகளால் தன் மார்பகங்களை மறைத்தும்,கால்களால் பிறப்புறுப்பை மறைத்தும் கூனி குறுகி மானத்தை காக்க போராடிக்கொண்டிருந்தாள்.இலவச வேட்டி சேலைகள் வழங்கும் அரசியல்வாதிகளோ பணக்காரர்களோ இப்பொழுது மானம் காக்க துண்டு கூட கொடுக்கமுன்வரவில்லை.ஒருவன் தன் கையிலிருந்த டார்ச் லைட்டின் ஒளியை கொண்டு அவளின் ஒவ்வொரு அங்கத்தையும் அளந்துக் கொண்டிருந்தான்.என் எதிர்காலத்திற்க்கு பிரச்சனை வராமல் இருக்குமாணால் கண்டிப்பாக போய் தடுத்திருப்பேன்.

தெருவில் யாருமே இல்லை.நான் மட்டுமே நின்றிருந்தேன்.மக்கள் என்னை விட விவரமாக இருந்தார்கள்.தூரத்தில் போலீஸ் வண்டியின் சைரன் ஓசை கேட்டது.எனக்குள் நம்மிக்கையை ஏற்படுத்தியது.இனி அவளை காப்பாற்றிவிடலாம்.அவளும் அதை தான் நினைத்திருப்பாள்.

நேரம் ஆகஆக சைரன் நெருங்கிவந்தது.இதோ தெரு முனைக்குள் வந்துவிட்டது.தூரத்தில் ஒரு வெள்ளை அம்பாசிடர் ஊர்ந்து வந்தது.அதன் முன் இருந்த கொடியும்,இந்த கும்பலின் கொடியும் ஒரே மாதிரியிருந்தது.

நானும் ஹசினாவும் பத்தாம் வகுப்பு வரை இந்த காரை 'பிளஸர்' என்றே அழைத்தது ஏனோ நினைவுக்கு வந்த தொலைத்தது.

பிளஸரிலிருந்து இறங்கிய அந்த நாமம் போட்ட தலைவர் ஒருவனின் காதில் ஏதோ முனுமுனுத்தார்.பிளஸர் வேகமாக தெருவை கடந்தது.காரின் பின் இருக்கையில் இருந்த எங்க ஏரியா இன்ஸ்பெக்டர் ஹசினாவையே பார்த்துக்கொண்டிருந்தார்.எங்களின் கடைசி நம்பிக்கையும் பொய்த்தது.என் தங்கயை நாளை பெண் பார்க்க வருகிறார்கள்.இல்லையெனில் கண்டிப்பாக தடுத்திருப்பேன்.

அந்த தாடிக்காரன் ஹசினாவின் கைகளை விலக்கி அவளின் மார்பகங்களை காட்டி "இது என்ன பாமா? நீங்க தான் பாம் வைக்கிறவங்களாச்சே"

இப்பொழுது மீண்டும் "போய் காப்பாத்துடா" என்றான்

நான் அமைதியாக நிற்கவே என் மீது காறி துப்பினான்.இதற்க்கு மேலும் என்னால் பொருக்கமுடியாமல்....... வீடுதிரும்பினேன்.

மறுநாள் காலையில் "கோவை கலவரத்தில் மேலும் ஒரு பெண் பலி" என்ற நாளிதழ் செய்தியின் மூலமே ஹசினாவின் இறப்பை தெரிந்துகொண்டேன்.

"நீ நினைத்திருந்தால் காப்பற்றியிருக்கலாம்" என்றான் அவன்.

"ம்.."

கொஞ்ச காலத்தில் மாற்றல் வாங்கி சென்னை வந்துவிட்டேன்.சிறிது காலம் அமைதியாக போனது.ஒரு நாள் நாளிதழில் "கோவை குண்டுவெடிப்பு வழக்கில் ஒருவருக்கு தூக்கு" என போட்டு ஹசினாவின் கணவர் படத்தை போட்டிருந்தார்கள்.

ஜெயிலில் அவரை பார்க்க சென்றேன்."என் பீவியை பத்து பேர் கற்பழித்து கொன்றிருக்கின்றனர்.அவர்களுக்கு சாவை காண்பிக்கவே இவ்வாறு செய்தேன்" என்றார்.அப்பொழுதுதான் ஹசினா வன்புணரப்பட்டது தெரிந்தது.ஹசினா என்னை காறி உமிழ்ந்தது போன் உணர்ந்தேன்.

"இவர் தூக்குக்கு போவதும் உன்னால் தான்" மீண்டும் வந்தான்

பலமுறை எனக்கும் அவனுக்கும் இது தொடர்பாக வாக்குவாதம் எழுந்தது,அவன் வேறு யாருமல்ல.நான் தான் அவன்.எனக்குள் தான் இருக்கிறான்.மனிதநேயம்,ஆண்மை,மனசாட்சி.. என்று தினமும் தனக்கு ஒரு பெயர் சூட்டிக்கொள்வான்.

ஹசினா செத்தது அவளின் விதி என்பதை அவன் ஏற்றுக்கொள்ள தயாரில்லை.நான் தான் அவளையும் அவள் கணவனையும் கொன்றேன் எங்கிறான்.

இன்றும் அப்படித்தான்."ருச்சிகாவுக்கு 14 ஆண்டுகள் பிறகு அவளின் நண்பன் தீர்ப்பு வாங்கிகொடுத்தான்" என்பதை படித்துவிட்டு என்னுடன் சண்டையிட்டான்.என்னை விட்டு பிரிந்துவிட்டான்.

அவன் வேறு யாருமல்ல என் மனசாட்சி தான்.உங்களிடம் இருக்கிறானா?கொஞ்சம் தேடிப்பாருங்களேன்.